மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், கோவில்பட்டி

அ.வ.எண். 51 /2019

பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்குமூலம் பி.வா.சா.1.

---

பெயர். – திரு.கேசவன்
த/பெ. – திரு.குருசாமி
கிராமம் – ஜமீன்தேவர்குளம்
தொழில் – தனியார் கல்லூரியில் பணி.
தாலுகா – கோவில்பட்டி
வயது – 48.

1872–ஆம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டத்தின்படி 2026–ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 29–ஆம் நாள் இந்நீதிமன்ற உதவியாளரால் சத்தியப்பிரமாண வாக்குமூலம் செய்யப்பட்டு, நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டு, ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

<u>முதல் விசாரணை.–</u>

1) நான் இந்த வழக்கில் 2ம் பிரதிவாதி ஆவேன். எனது தரப்பு சாட்சியத்தை நிருபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். அதை பிரதிவாதிகள் தரப்பில் ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன்.

| | |
|---|---|
| 1 | 14.11.1952ல் லட்சுமியம்மாளுக்கு, வெங்கிடசாமி நாயக்கர் எழுதிக்கொடுத்த அடமானப்பத்திரம் சப்ரி நகல் பி.வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 2 | 06.01.1972ல் 1ம்பிரதிவாதியின் தகப்பனார் ரெங்கசாமி நாயக்கருக்கும், அவருடைய சகோதரர் ராமசாமி நாயக்கரும் செய்துகொண்ட பரிவர்த்தனை பத்திரம் இணையதள பதிவிறக்க நகல் பி.வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 3 | 28.06.2004ல் கிருஷ்ணராமானுஜம் அவருடைய மகன் குருசாமிக்கு எழுதிக்கொடுத்த தானசெட்டில்மெண்ட் பத்திரம் இணையதள பதிவிறக்க நகல் பி.வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 4 | 04.01.2018ல் நத்தம் சர்வே எண்.329/64க்கு கோவில்பட்டி வட்டாட்சியர் வழங்கிய நத்தம் நிலவரி திட்டதுாய சிட்டா உண்மை நகல் பி.வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 5 | 29.11.2024ல் நத்தம் சர்வே எண்.329/64க்கு பெறப்பட்ட பட்டா இணையதள பதிவிறக்க நகல் பி.வா.சா.8 ஆ.ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 6 | 26.06.2026ல் பிராது தபசில் சொத்தின் சர்வே எண்.329/53க்கு வெங்கிடசாமி நாயக்கர் பெயரில் உள்ள பட்டா இணையதள பதிவிறக்க நகல் பி.வா.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 7 | 11.08.2022ல் ஜமீன்தேவர்குளம் கிரமத்தில் உள்ள பேங்க் ஆப்பரோடா வாதிக்கு எழுதிக்கொடுத்த ரசீது இணையதள பதிவிறக்க நகல் பி.வா.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது. |

(பி.வா.சா.ஆ.4 முதல் பி.வா.சா.ஆ.10 வரையிலான ஆவணங்கள் வாதி தரப்பில் ஆவணங்களில் கண்டுள்ள சங்கதிகள் குறித்து ஆட்சேபனை செய்யப்பட்டு ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படகிறது.)

வாதியின் வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டுகிறேன்.

குறுக்கு விசாரணை – வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க வேறுதேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)C.கருப்பசாமி,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கோவில்பட்டி,
29.06.2026.